**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,**

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.
2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23 ஆம் நாள் வெள்ளிக்கிழமை
**இ.ம.எண்.07/2025**

IN

**அசல் வழக்கு எண்.248/2016**

1. பிரேம்ராஜ்
2. அந்தோணி திரவியம்

....மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகள்

/எதிர்/

1. கார்த்தீசன்
2. தங்கப்பாண்டி ....1, 2 எதிர்மனுதாரர்கள்/வாதிகள்
3. முத்துப்பாண்டி
4. கோவிந்தன்
5. துக்கமுத்து ....3 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/ 3 முதல் 6 பிரதிவாதிகள்

இம்மனுவானது 20.01.2026 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.E.டேனியல் பர்னபா அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.அருண்குமார் அவர்கள் ஆஜராகியும், 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் தோன்றாத்தரப்பினர்களாக கருதப்பட்டுள்ள நிலையில், இம்மனுவிலும் தோன்றாத்தரப்பினர்களாக தீர்மானிக்கப்பட்டும், 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவிற்கு may be allowed on terms என மேற்குறிப்பு செய்யப்பட்ட நிலையிலும், மனு மற்றும் அசல் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், மனுதாரர்கள் தரப்பு வாத உரையை கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.01.23 17:47:13 +0530

**உத்தரவு**

மனுதாரர்களால் இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151–ன் கீழ், 01.09.2025 ம் தேதி மனுதாரர்கள் தரப்பு சாட்சியத்தை Closed செய்யப்பட்ட வாய்தாவை மனுதாரர்களை சாட்சியாக விசாரணை செய்யும் பொருட்டு அசல் வழக்கை மறுதிறவு செய்து உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்:–**

1, 2 எதிர்மனுதாரர்கள்/வாதிகள் மனுதாரர்கள் மீதும், 3, 4, 5 எதிர்மனுதாரர்கள் மீதும் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், மேற்படி வழக்கில் மனுதாரர்கள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்றும், இந்நிலையில் தாவா வழக்கானது 26.11.2025 ம் தேதி வாதுரைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது என்றும், மேற்படி மனுதாரர்கள் வழக்கறிஞர் வழக்கு கட்டினை படித்துப் பார்த்தபின்பு தாவா வழக்கில் மனுதாரர்களை விசாரணை செய்வதற்காக கடந்த 01.09.2025 ம் தேதி இறுதி வாய்தா போடப்பட்டிருந்தது என்றும், அன்றைய தேதியில் மனுதாரர்களை அழைத்தும் ஆஜரில்லை என்றும், மனுதாரர்கள் தரப்பு விசாரணை முடிக்கப்பட்டு வாதுரைக்காக வாய்தா ஏற்பட்டுள்ளதாகவும், மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்களை விசாரணை செய்வது வழக்கில் உள்ள பிரச்சனையை தீர்மானம் செய்வதற்கு முக்கியமானதாக இருக்கும் என்றும் வாடகை ஒப்பந்தம் மற்றும் வங்கி Statement போன்றவை தாக்கல் செய்யாமல் இருப்பதாகவும் தனது வழக்கறிஞர் தன்னிடம் தெரிவித்தார் என்றும், 2 ம் மனுதாரர் 01.09.2025 ம் தேதியும், அதற்கு முந்தைய நாட்களிலும் தனது அலுவலகப் பணியின் காரணமாக நேரில் ஆஜராக இயலவில்லை என்றும், கடந்த 01.09.2025 ம் தேதி Closed செய்யப்பட்ட வாய்தாவை மனுதாரர்கள் தரப்பு சாட்சியத்தை விசாரணை செய்யும் பொருட்டு ரீஓபன் செய்து உத்தரவிடவேண்டியது அவசியமாயும், நியாயமாயும் இருக்கிறது என்றும், ஆகையால், 01.09.2025 ம் தேதி மனுதாரர்கள் தரப்பு சாட்சியத்தை Closed செய்யப்பட்ட வாய்தாவை மனுதாரர்களை சாட்சியாக விசாரணை செய்யும் பொருட்டு அசல் வழக்கை

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.01.23 17:47:20 +0530

மறுதிறவு செய்து உத்தரவிடக்கோரி இம்மனு மனுதாரர்கள் தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) இம்மனுக்களின் 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் may be allowed on terms என கற்றறிந்த வழக்கறிஞரால் மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது. 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் தோன்றாத்தரப்பினர்களாக கருதப்பட்டுள்ள நிலையில், இம்மனுக்களிலும் தோன்றாத்தரப்பினர்களாக தீர்மானிக்கப்பட்டுள்ளார்கள்.

3) **<u>தீர்வுக்குரிய பிரச்சனை:-</u>**

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

4) மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு, அசல் வழக்கு கோப்பு மற்றும் மனுதாரர்கள் தரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

5) அசல் வழக்கானது வாதிகளால் பிரதிவாதிகளுக்கு எதிராக 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதியின் பெயருக்கு 10.08.2016ல் மேலநீலிதநல்லூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.1564/2016 என்ற எண்ணில் எழுதிக் கொடுத்த கிரைய ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல, இல்லா நிலையது என்றும், மேற்படி கிரைய ஆவணம் பிராது தபசில் சொத்துக்களில் வாதிகளின் உரிமையை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தக்கூடியதில்லை எனவும் ஒரு விளம்புகை பரிகாரம் வழங்கியும், தபசில் சொத்து வாதிகளுக்கு மட்டும் பாத்தியப்பட்டது என விளம்புகை செய்தும், அதனை அனுசரித்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) அசல் வழக்கானது வாத உரைக்காக ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில், மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகளால் இம்மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.01.23 17:47:27 +0530

7) அசல் வழக்கு கோப்பின் பரிசீலனையில் இருந்து, 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் சாட்சி விசாரணைக்காக பல்வேறு வாய்ப்புகள் வழங்கப்பட்டும் சாட்சிகளை முன்னிலைப்படுத்தாத காரணத்தினால் 01.09.2025 அன்று 1, 2 பிரதிவாதிகள் தரப்பு சாட்சியம் இந்நீதிமன்றத்தால் முடித்து வைக்கப்பட்டுள்ளது.

8) மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவில் அசல் வழக்கானது 26.11.2025 ம் தேதி வாதுரைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது என்றும், மேற்படி மனுதாரர்கள் வழக்கறிஞர் வழக்கு கட்டினை படித்துப் பார்த்தபின்பு தாவா வழக்கில் மனுதாரர்களை விசாரணை செய்வதற்காக கடந்த 01.09.2025 ம் தேதி இறுதி வாய்தா போடப்பட்டிருந்தது என்றும், அன்றைய தேதியில் மனுதாரர்களை அழைத்தும் ஆஜரில்லை என்றும், மனுதாரர்கள் தரப்பு விசாரணை முடிக்கப்பட்டு வாதுரைக்காக வாய்தா ஏற்பட்டுள்ளதாகவும், மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்களை விசாரணை செய்வது வழக்கில் உள்ள பிரச்சனையை தீர்மானம் செய்வதற்கு முக்கியமானதாக இருக்கும் என்றும் வாடகை ஒப்பந்தம் மற்றும் வங்கி Statement போன்றவை தாக்கல் செய்யாமல் இருப்பதாகவும் தனது வழக்கறிஞர் தன்னிடம் தெரிவித்தார் என்றும், 2 ம் மனுதாரர் 01.09.2025 ம் தேதியும், அதற்கு முந்தைய நாட்களிலும் தனது அலுவலகப் பணியின் காரணமாக நேரில் ஆஜராக இயலவில்லை என்று கட்சி எடுக்கப்பட்டுள்ளது.

9) மனுதாரர்களால் மனுவில் சொல்லப்பட்டுள்ள காரணங்கள் நிரூபணம் செய்யும் வகையில் எவ்வித சாட்சிய, சான்றாவணங்களும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. ஆகையால், மனுதாரர்களால் மனுவில் சொல்லப்பட்டுள்ள காரணங்கள் இந்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.01.23 17:47:34 +0530

10) இருப்பினும், அசல் வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டிருப்பதால் மனுதாரர்கள் தரப்பு சாட்சியம் அசல் வழக்கின் சிறந்த நீதிமுறை தீர்மானிப்பிற்கு அவசியமானது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

11) ஆகையால், அசல் வழக்கானது மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகள் தரப்பு சாட்சிய விசாரணைக்காக மறுதிறவு செய்யப்பட்டு, இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது.

12) எனவே, மேற்கண்ட பரிசீலனையிலிருந்து இம்மனுவானது நிபந்தனை செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்பட்டு இம்மனுவிற்கு இந்நீதிமன்றத்தால் முடிவு காணப்படுகிறது.

**13) இறுதியாக**

இம்மனுவானது ரூ.1000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) நிபந்தனை செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர்கள் மேற்படி தொகையினை 1, 2 எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்கு நேரடியாக 29.01.2026 ம் தேதிக்குள் செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 29.01.2026.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23 ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.01.23 17:47:41 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**<u>இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் </u>:-**

**- இல்லை -**

ALIMA M Digitally signed by ALIMA M
Date: 2026.01.23 17:47:47 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

மு.மா.உ. நீதிமன்றம்,
சங்கரன்கோவில்,

I.A.No.07/2025
in
O.S.No.248/2016
உத்தரவு (Draft / Fair)

நாள் : 23.01.2026